# செனட்டர் மாணிக்கம் புதிய கட்சி

Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் ௧

இலக்கம் : 380

இதழ் 46

National Tamil Daily

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ பங்குனி 14 ஜுல்ஹஜ் 16 செவ்வாய்க்கிழமை [28-3-67]


## ஆரம்பிக்க ஆதரவு

மட்டக்களப்பு, திங்கள்

இலங்கை-இந்தியஒப்பந்த மசோதா சம்பந்தமாக ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறிய செனட்டர் முத்தையா மாணிக்கம் புதிய கட்சி ஆரம்பித்தால் அதற்குப் பூரண ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக மட்டக்களப்புப் பகுதியிலிருந்தும் இதர பகுதிகளிலிருந்தும் பலர் தெரிவித்தனராம்.

'விடுதலை இயக்கம்'என்ற பெயரில் புதிதாக ஆரம்பிக்கப்படும் கட்சி செனட்டர் மாணிக்கம் தலைமையில் ஆரம்பமாகுமென்றும் இந்தக் கட்சியின் கொள்கைகளும் நோக்கங்களும் அடங்கிய விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் விரைவில் இது வெளியிடப்படுமென்றும் அறியப்படுகிறது.

# பர்மா தமிழர் பற்றிய அண்ணாவின் யோசனை

## பல்கலைக்கழக மாணவருக்கு வழங்கும்நிதி நிறுத்தப்படும்

### கடன் வழங்குவதற்கு தேசிய கல்விச்சபைமுடிவு

கொழும்பு, திங்கள்

பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் செலவுக்கெனவழங்கப்படும் நிதிஉதவியை நிறுத்திவிடுவதென்று உயர்கல்விக்கான தேசியக்கல்விச்சபை தீர்மானித்திருக்கிறது. இதற்குப் பதிலாக மாணவர்களுக்கு கடன் வழங்குவதென்று சபை முடிவு செய்துள்ளது. பல்கலைக்கழகப்படிப்பு முடிந்து வெளியேறும் மாணவர்கள், வேலையிலமர்ந்த பின் இக்கடன்தொகையை ந் திருப்பிச்செலுதத வேண்டும்.

உபகாரச்சம்பளப் படிப்பு பற்றிய தீர்மானமொன்றையும் சபை நிறைவேற்றியுள்ளது.

## நஷ்டஈட்டுக்குப் பதில் அரிசி கேட்க வேண்டுமென்கிறர்

### பிரதமர் இந்திராவிடம் வற்புறுத்தவும் முடிவு

சென்னை, மார்ச் 27

பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு குடிபெயர்ந்து வரவிருக்கும் இந்தியர்களுக்கு பர்மிய அரசாங்கம வழங்கவிருக்கும் நஷ்டஈடுகளுக்குப் பதில் அரிசியை தமிழ் நாட்டுக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்வதற்கு இந்திய அரசாங்கம் முன் வரவேண்டும் என்று தமிழ் நாட்டு முதன் மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை வற்புறுத்த விருக்கின்றுர்.

குடிபெயர்ந்து வரவிருக்கும் இந்தியர்கள் அனைவரும் அனேகமாக தமிழ் நாட்டவர்களாகவே இருப்பதால் அவர்களுக்கு சேரவேண்டிய நஷ்ட ஈட்டுப் பணத்தை தமிழ்நாடு அரசாங்கம் காலப்போக்கில் செலுத்திவிட முடியும் என்று திரு. அண்ணுதுரை அபிப்பிராயம் கொண்டிருக்கின்றுர்.

திரு. அண்ணுதுரை அண்மையில் புதுடில்லி போய் பிரதமர் இந்திரா காந்தியை சந்திக்கவிருப்பதால் அப்போது தமது இந்தத் திட்டம் பற்றி அவரிடம் விளக்கப் போவதாக இன்று தமிழ் நாட்டு சட்ட மன்றத்தில் தெரிவித்தார்.

அவசியமாலுல் பர்மாவுக்கு தாமே நேரில் சென்று அங்குள்ள தமிழ்நாட்டு இந்தியர்களைத் தமது திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகோள் விடுக்க முடியும் என்பதை பிரதமரிடம் தெரிவிக்கப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பர்மாவிலிருந்துவரும் இந்தியர்களுக்கு நஷ்ட ஈட்டுப் பணத்துக்கு பதில் அரிசி கோரும்படி தமிழ் நாட்டு மக்கள்பலர் தம்மிடம் தெரிவித்திருப்பதாகவும் அவர் கூறினுர்

### மந்திரிகளின் சொத்து விபரம

தமிழ்நாட்டு முதன்மந்திரியும், சகமந்திரிகளும் சட்டசபையின் அடுத்த கூட்டத்தில் தங்கள் சொத்துக்கள் பற்றிய வபரங்களை அறிவிப்பார்கள் என்று முதன்மந்திரி அண்ணுதுரை அறிவித்துள்ளார்

யாழ்.மாவட்டத்திலுள்ள

## அங்கவீனர்களுக்கு தொழில் பயிற்சி

### அரசாங்கம் திட்டம் வகுத்துள்ளது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிக்கும் வலது குறைந்தோருக்குத் தொழிற்பயிற்சி அளிக்கும புதிய திட்டம் ஒன்றை அரசாங்கம் வகுத்துள்ளது. இது பற்றிய சுற்று நிருபமொன்று யாழ்ப்பாணம் அரசாங்க செயலக சமூக சேவை நிர்வாக உதவியாளர் திரு. என். சிவசிதம்பரம் கிராம சேவையாளர்கள், சுகாதார பரிசோதகர்கள், கிராமாபிவிருத்தி உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி முறிவு நெறிவு சிகிச்சை டாக்டர் ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

வலது குறைந்தோருக்குத் தொழிற் பயிற்சி அளிக்கும் திட்டத்தின்கீழ் யாழ்நகரில் புனர் வாழ்வு அளிக்கும் பயிற்சி நிலையத்தை சமூக சேவைப் பகுதியினர் அமைக்கவுள்ளனர். ஆரம்பத்தில் நல்ல ஆரோக்கியமுள்ள 14 வயதுக்குமேற்பட்ட ஆண்களை இப்பயிற்சிக்குச்சேர அழைக்

6-ம் பக்கம் பார்க்க

### மட்டக்களப்பில் நெருக்கடியான நிலைமை?

கொழும்பு. திங்

மட்டக்களப்பில் மாநகரசபை தேர்தல் ஒத்திப்போடப்பட்டதைத்தொடர்ந்துஅங்கு நெருக்கடியான ஒருநிலை உருவாகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக இங்கு செய்தி கிடைத்திருக்கின்றது.

பொலிசார் உஷாராக இருந்துவருகின்றனர்.

தேர்தல் நடைபெறவிருந்த தினத்தில் எதிர்ப்புக் கூட்டம் ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் அங்கு நடைபெற்றுவருக்கின்றன.

## நல்லூர் ஆறுமுகசாமி வாசலில் புதிய கோபுரம்

யாழ்ப்பாணம், செவ்

இலங்கையின் சரித்திரப் பிரசித்திபெற்றநல்லூர்க்கந்தசாமி கோவிலின் ஆறுமுகசாமி வாசலில் புதிய கோபுரம் அமைக்கும் வேலை இப்போது துரிதமாக நடைபெற்று வருகின்றது. இக்கோவில் கோபுர வாசலில் இருப்பதுபோல் அதனினும் சிறிய அளவில் அழகானசித்திரக் கலைக் காட்சிகளுடன் இக்கோபுரத்தை அமைப்பதற்கான வேலைகள் இப்போது இரவுபகலாக இங்கு நடைபெறுகின்றன.

இக்கோபுரத்து அருகாமையில் ஆறுமுகசாமி வாசலுக்கென புதிய மணிமண்டபம் ஒன்றும் அமைக்கப்படவிருக்கின்றது. இதில் நிறுவுவதற்கான'மணி.ஒன்றுஇங்கு ஏற்கெனவே கொண்டுவரப்பட்டுள்ளது. இம்மணிமண்டபம் கடந்த வருடங்களிலேயே நிறுவுவதற்கான ஆயத்தங்கள் செம்யப்பட்டு பின்னர் நிறுத்தப்பட்டிருந்தது.எதிர் வரும் ஆவணிமாதத்தில் நடைபெறவிருக்கும் இவ்வாலய வருடாந்த உற்சவத்துக்கு முன்னர் இக்கோபுர மணிமண்டபவேலை[illegible] பதற்கான துரிதவேலைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### பார்வேயின் சகோதரி போட்டி

புதுடில்லி, மார்ச் 27

பம்பாய் தொகுதியில் திரு. கிருஷ்ணமேனனைத் தோற்கடித்து வெற்றி பெற்ற காங்கிரஸ் அபேட்சகர் திரு. எச். சி. பார்வே காலமானதால் அந்த தொகுதிக்கு காங்கிரஸ் கட்சியின் சார்பில் இப்போது திரு. பார்வேயின் சகோதரியான தாராசாப்ரே என்பவர் போட்டியிடவிருக்கின்றுர்.

திரு. கிருஷ்ணமேனன் இத்தொகுதியில் மீண்டும் [illegible] தமது அபேட்சா பத்திரத்தை தாக்கல் செய்திருக்கிறுர்.

## அமைச்சர் முகமது தலைமையில் சோஷலிசஎதிர்ப்பு முன்னணி

### திருக்கோணமலையில் உதயம்

— நமதுநிருபர் து. பாலேந்திரா —

திருக்கோணமலை, திங்கள்

தேசிய அரசங்கத்தின் தொழில், வேலை, வீடமைப்பு அமைச்சர் திரு. எம். எச். முகம்மது இங்குவிஜயம் செய்துள்ளார். உப்புவெளி சேரி ஒழிப்புத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படவிருக்கும் வீடுகளுக்கான அத்திவாரக் கல் நாட்டு விழாவில்பங்குகொண்டார். இவ் விழாவில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சோமபாலகுணதிரா ஊராட்சிக்கழகத் தலைவர் வைத்திய கலாநிதி எஸ். சிவானந்தன், பாராளுமன்ற உறுப்பினர் திரு. சு. ம. மாணிக்கராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அடிக்கல்லை நாட்டிவைத்து அமைச்சர் பேசுகையில் கூறியதாவது:-

"வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 5000க்கு மேலான வீடுகளை விரைவாகக் கட்டி முடிப்பதற்குஉலகரெண்டா மூலமாகக் கொந்தருத்துக்காரர்களை வருவிக்கப் போகின்றேன். முன்னுள் அரசாங்கத்தின் கவலையீனமான வேலைகளினுலும் பிற்போக்குக் கொள்கைகளினுலும் இவ் வேலைகள்யாவும் ஸ்தம்பித்திருந்தன. அண்மையில் நிகழ்ந்த இடைத் தேர்தல்களின் போது ஐக்கியதேசியக் கட்சி தோற்றுப் பேனதாகப் பலர் கருதுகின்றனர். அவை தோல்வியே இல்லை. முன்னிலும் பார்க்கக் கூடுதலான சதவீதம் வாக்குகள் இம்முறைநாம் பெற்றுள்ளோம்.

திருக்கோணமலையில் சோசலிஷ எதிர்ப்பு முன்னணி யொன்று அமைச்சர் தலைமையில் உருவாக்கப்பட்டது மற்றும் திரு. முகம்மது. நகராண்மைக்கழக 3-ம் வட்டார அங்கத்தவர் திரு. காதர் 9-ம் வட்டார அங்கத்தவர் திரு. வீரசுப்பிரமணியம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சமூக அரசியல் பொருளாதார முன்னேற்றத்திற்கு சகிப்புத்தன்மை இன்றியமையாதது. சகிப்புத்தன்மை இல்லாத காரணத்தினலேயே இன்று மக்கள் மத்தியில் மன விரோதங்களும் வீண்சண்டைகளும் நிகழ்கின்றன. சகிப்புத்தன்மையினுல் நாம் பல சாதனைகளை நிலை நாட்டலாம்.

—சுவாமி சிவானந்தா

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஹு பங்குனி மீ 14வ (28-3-67)

## தேசிய நெருக்கடி

இந்தியாவில் ரூபாயின் மதிப்பைக்குறைத்ததனுல் பயன் ஏதும் ஏற்படவில்லையென்று இந்தியாவின் உதவிப் பிரதமரும் நிதிமந்திரியுமான திரு. மொரார்ஜிதேசாய் தெரிவித்திருக்கிறுர். ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டதால் இந்தியாவுக்குப் பயன் ஏற்படாதது மட்டுமல்ல பெரும் தீங்கும் ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டுக் கடன் தொகையும் வட்டியும் மும்மடங்காக அதிகரித்திருக்கிறது. இந்தியாவைப் பின்பற்றி, அதனுல் ஏற்படக்கூடிய விளைவுகளைச் சமாளிக்கலாம் என்ற நோக்கத்துடன் இலங்கையும் தனது ரூபாயின் மதிப்பைக் குறைக்க வேண்டுமென்று யோசனை கூறப்பட்டது. நல்லகாலமாக இந்த யோசனை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. விவேகமான செயல் இது.

உலகவங்கி நிபுணர்களின் யோசனைக்கிணங்கவே இந்தியா தனது ரூபாயின் மதிப்பைக் குறைத்தது. இலங்கைக்கும் உலகவங்கி நிபுணர்கள் வந்து போனுர்கள். ஆலோசனைகளும் கூறினுர்கள். உலகவங்கி நிபுணர்களும் மற்றும் உதவியளிக்கும் நாடுகளின் பிரதிநிதிகள், நிபுணர்களும் இலங்கைக்கும் மற்றும் உதவி கோரும் நாடுகளுக்கும் சென்று ஆலோசனை கூறுவதும் சிபார்சு செய்வதும் புதிதல்ல. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இந்த நிபுணர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்து வந்திருக்கிறது. அதன் விளைவுகளை இலங்கை அனுபவித்து வருகிறது.

உதவியோ, கடனே கேட்பவர்கள், உதவி தருபவர்களிடம், அவர்கள் உதவியளித்தாலும் அளிக்காவிட்டாலும் அவர்கள் கூறும் ஆலோசனைகளையும் [புத்திமதி, உபதேசம்] சிபார்சுகளையும் கேட்கத்தான் வேண்டும். உதவி கிடைத்தால் உபதேசத்தைப் பற்றிக் கவலையில்லை. உதவி கிடைக்காமல் உபதேசம் மட்டும் கிடைத்தால் கோபம் வரும். உதவி அளித்துவிட்டு, திடீரென்று உதவியை நிறுத்திக் கொண்டாலும் கோபம் வரத்தான் செய்யும். உதவி தராமல்விட்டதற்சாகவோ, உபதேசம் மட்டும் கிடைத்ததற்காகவோ, உதவியை நிறுத்திக் கொண்டதற்காகவோ கோபப்பட்டுப் பயனில்லை. அதில்அர்த்தமுமில்லை. கடனே, உதவியோ கேட்கும்போது அந்த நிலையிலிருக்கும் போது மானம், வெட்கம் பார்க்க இடமில்லை.

கடனே, உதவியோ கேட்காமலிருக்க வேண்டியவழியைப் பார்த்துக் கொள்ளவேண்டும். கடனுதவியும் கேட்காமல் விட்டால், மற்றவரின் உபதேசமோ, ஆலோசனையோ, சிபார்சோ கேட்க வேண்டி நேராது. எந்த நாடும் தனது நலனைப் பேணுமல் எவருக்கும் உதவிசெய்ய முன்வராது; அப்படி எதிர் பார்க்கவும் முடியாது. உதவியளிக்குப்போது வட்டி மட்டுமல்ல அரசியலும்நோக்கமாகவே இருக்கும். இது உலக நாடுகள் பலவற்றிலும் அனுபவ பூர்வமாகக் காணப்படும் உண்மை.

சீனு போன்ற நாடுகளிடம் உதவி கோரியதால் அவைகளின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்து அவை பக்கம் சார்வதாக முன்னைய கூட்டரசாங்கம் ஆட்சியிலிருந்தபோது குற்றஞ்சாட்டப் பட்டது. இப்போது ஆட்சியிலுள்ளவர்கள் அமெரிக்காவிடம் உதவிபெற்று அதற்கு நாட்டை விற்றுவிடப்போவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

பிறரின் உதவியைஎதிர்பார்த்து வாழவேண்டிய நிலையில் நாம் இருப்பது தான் இதற்குக்காரணம். நாட்டின் உணவுத் தட்டுப்பாடும், பொருளாதாரக் கஷ்டமும் ஒரு கட்சியினதோ, ஒரு பிரிவினதோ தனிப்பட்ட பிரச்னையல்ல. இது தேசியப் பிரச்னை; தேசிய நெருக்கடி. இதற்குத் தேசியரீதியில் தீர்வுகாண வேண்டும். பிறரின் உதவியின்றி, நமது தேவையை, நமது மூலவளங்களை, நமது உழைப்பைப் பயன்படுத்தி நிறைவேற்ற அனைவரும் ஒத்துழைத்தால் பிறரின் ஆலோசனைகளைக் கேட்கவேண்டி நேராது; பிறருக்குக் கடமைப்படவும் நேராது. நமது தலைவர்கள் நாட்டின் நலன் கருதி ஒன்றுகூடி ஆலோசித்தால் இது கஷ்டமல்ல,

ஆசிரியர் சம்பளம், வேலை நிலைபற்றி ஆராய

# "விசாரணைச் சபை ஒன்று வேண்டும்"

ஆசிரியர்களின் குறைகள் பற்றியும் அவற்றை நீக்குவதற்கான வழிவகைகள் பற்றியும் தேசிய ஆசிரியர்சங்கம் கல்விஅமைச்சருக்கும், நிதிஅமைச்சருக்கும் அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அறிக்கையின் ஒரு பகுதி, நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்திருந்தது. இது மற்ருெரு பகுதியாகும்.

[நேற்றைய தொடர்ச்சி:

### ஆசிரியர்களின் சம்பளம்

ஒரு தொழிலினதோ, உத்தியோகத்தினதோ முக்கியத்துவம் அவற்றைச் செய்வோரின் வேதனம், வேலை நிலைபரங்கள் மற்றும் அவர்கள் பெறும் நன்மைகள் என்பவற்றைக்கொண்டே அமைவதாகும். இந்த அளவுகோலைக்கொண்டுபார்ப்போமாயின் மிகஉயர்ந்த தொழிலைப் புரிபவர் என்று அடிக்கடி புழகப்படுவதற்கு இலக்காகும் ஆசிரியர்களே மிகவும் துன்பங்கள் நிறைந்த மற்றெல்லாத் தொழில்களிலும் அதிக துன்பங்கள் நிறைந்த தொழிலை மேற்கொண்டவர்களாய் இருக்கின்றனர்.

பின்வரும் காரணங்களுக்காக ஆசிரியர்களின் சேவை நிபந்தனைகளையும், சம்பளத் திருத்த அமைப்புகளையும் ஆராய்தற்கென ஒரு விசாரணைச்சபை நிறுவப்படுதல் வேண்டுமென வற்புறுத்துகின்ருேம்.

[அ] பல்வேறு அதிருப்திகளையும் தம்முட்கொண்டுள்ள ஒரு சேவையாளரிடமிருந்து முழுமனத்தோடு கூடிய ஒத்துழைப்பையும், மனப்பூர்வமான ஆதரவையும் பெற்று, கல்வித்துறையிலே புதியதாக ஏற்படுத்தவிருக்கும் நன்மாற்றங்களை வெற்றியோடு செயற்படுத்தல் இயலாது,

[ஆ] அரசாங்கம் சிறிது சிறிதாய்த் தனது நிறைவு நிலையிலிருந்து கீழ்நோக்கிச் செலகின்ற இவ்வாசிரியத் தொழிலை மேலும் அது கீழ்ச் செல்லாமல் தடுத்து நிறுத்த ஆவனசெய்வதைத் தனது முக்கிய கடமையாகக் கொள்ளல் வேண்டும். இக்கீழ் நிலைக்கான அடிப்படைக் காரணம், மிகக் குறைந்த சம்பளத்தால் ஏற்பட்டுள்ள ஆசிரியர்களது மன இடிவும் உத்தியோக உயர்வுகள் கிடைக்காது அமைந்த ஓர் அமைப்பில் ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையுமேயாகும்.

[இ] சுயபாஷா ஆசிரியர்கள் தேசியக் கல்வித்திட்டத்தில் முக்கிய பங்கு வகிக்க வேண்டியவர்கள் என்று அடிக்கடி உரைத்து வந்தாலும், அரசாங்கம் அவர்களுக்கு வெறும்வாய்ச் சவடாலான உற்சாகம் ஒன்றையே அளித்துவருகின்றது. புதிய நிலைமைக்கேற்பச் சுயபாஷா ஆசிரியர்களுக்கு உறுதிவாய்ந்த அடிப்படையிலே ஒருபுதிய சம்பளத்திட்டத்தை வகுத்தளித்தல் வேண்டும்.

[ஈ] நிபுணத்துவமும், ஆசிரியர்களின் பலதரப்பட்ட சம்பளப் பிரச்னைகளிலே தெளிந்த ஞானமும் அனுபவமும் கொண்ட ஒரு விசேடவிசாரணைச் சபையே முந்தைய விசாரணைச்சபைகள் விட்டுள்ள குறைகளை நிவர்த்திக்க வல்லதாகும். இந்த விசாரணைச்சபையிலே ஆசிரியத் தொழிலின் நலன்களைக் காக்க, ஆசிரிர் ஒருவரும் நியமிக்கப்படல் வேண்டும்.

[உ] தமது பொறுப்புக்களாலும், கடமைகளாலும் மற்றைய அரசாங்க அலுவலினின்றும்வேறுபட்டுள்ள ஆசிரியர்களுக்கேயான பிரச்சினைகளையும், குறைபாடுகளையும் விசாரணை புரிந்து அவற்றை நிவர்த்திப்பதற்கான உறுதியை அளிக்கும் வகையிலே, நிபுணர்கள் அமைந்த விசாரணைச்சபை தொழிற்படல் வேண்டும்.

ஆசிரியர் சங்கங்கள், வேருன கல்விசேவைக்குழு அமைக்கப்படல் வேண்டும் என்பதற்குக் காட்டும் காரணங்கள் பின்வருவன:

[அ] ஆசிரியர்கள், கல்லூரிகள், பாடசாலைகளிற் கடமைபுரியும் உறுதுணையாளர்கள் வித்தியாதரிசி உள்ளிட்ட நிர்வாக அதிகாரிகள் எனப் பெருந்தொகையான அலுவல்கள் கல்விப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இத்தகைய பெரியதொரு அமைப்பைத் தவிர்த்து கல்விமா அதிபர் மாத்திரம் நிர்வகிப்பதும், அவரே நியமனங்கள், மாற்றங்கள், மற்றும் நிபந்தனைகளை வகுப்பதும் முடியாதகாரியங்களாகும்.

[ஆ] மாவட்ட அதிகாரிகளும்நிர்வாக அதிகாரிகளும் அரசியற் செல்வாக்கின் கீழ் [illegible] தால் அவர்களால் சுதந்திரமான சேவைச் சபை போல இயங்குதலும் முடியாத விடயமே. ஆசிரியர்களின் பெரும்பாலான துன்பங்களுக்கும் குறைகளுக்குமான காரணமே இந்த அரசியல் தலையீடும், கல்வி சம்பந்தப்படாத வேறு பிரச்சினைகளுமேயாகும்.

[இ] நிர்வாகச் சீர்கேடுகள் ஏற்படாமல் இருப்பதற்காக. மற்றைய பகிரங்கச் சேவைகள் போல ஆற அமர விடாது, உடனடியாகக்கல்விச் சேவையிலுள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படல் வேண்டும். தொழிலாற்றும் ஆசிரியர்களையோ, கல்வித்துறை நிர்வாகிகளையோ கொண்ட சேவைக்குழு ஒன்றே விரைவாகப் பிரச்சினைகளை அணுகித் தீர்க்கவல்லதாகும்.

[ஈ] கற்பித்தல் ஒரு தொழில் நுட்பக்கலையேயாகும் என்பது உணரப்பட்டு ஆசிரியர்களின் அருமையும் பாடசாலையின் மரபு முறைகளும் தொடர்ந்து பேணப்படவேண்டும்.

[உ] பூரணகல்வி முறைகளும் நாட்டின் முழுத் தேவைகளையும் உள்ளடக்கிய, பொதுநன்மை கொண்டனவாய் பகுத்தறிவோடும் நியாயபூர்வத்தோடும் செயற்படுவனவாய் அமைக்கப்படல் வேண்டும். கல்வித் துறையிலே செலவு செய்யப்படும் பணமெல்லாம், தேசிய செலவினமேயாதலால் இவ்வகையான தேசிய ஒருமைப்பாடும், யாவர்க்கும் பயன்படுந்தன்மையும் அச்செலவின் பிரதிபலன்களாய் அமைதல் முக்கியமாகும். கல்வியின் முழுப்பிரச்சினைகளையும் ஒரு பகிரங்கச்சேவைச்சபையோ தனிப்பட்ட நபரோ தீர்த்துவைத்தல் கூடும் என்று எதிர்பார்த்தல் இயலாது.

[ஊ] வெள்ளையறிக்கையிற் குறிப்பிட்டுள்ள அத்தியாவசிய மாற்றங்களைச் செயற்படுத்துவதோடு நின்றுவிடாது, நடைமுறையில் ஆசிரியர்கள் அடைந்துவரும் நியமனம், மாற்றம் உத்தியோக உயர்வு சம்பந்தப்பட்ட இவைகளையும் போக்குவதற்கானவழிவகைகளை இத்தகைய கல்விச் சேவைச்சபைகள் கையாள வேண்டும்.

[எ] சுதந்திரமான சபைகள் அமைப்பதன் மூலம் அரசாங்கக் கூட்டுத் தாபனங்களை நடத்தலாம் என்பது போன்ற அவசியங்கள் நேரும்போது கல்விச் சேவைக்குழு போன்றவை தேசியக்கல்வித் திட்டத்தை சரியான வழியிலே நடாத்திச் செல்லுதல் மேலும் அவசியமாகின்றது.

[6-ம் பக்கம் பார்க்க]

ஆசிரியருக்கு கடிதங்கள்

### சோறு விலை

அரிசி உற்பத்தி பெருமளவில் அதிகரித்துவிட்டது. தட்டுப்பாடு மிக விரைவாகக் குறைந்துவருகிறது. விலையும் நாளுக்குநாள் இறங்கிவருகிறது. அரிசியின் விலை அதிகரித்தபோது சிறிதேனும் தயங்காது சோற்றின் விலையை அதிகரித்த சாப்பாட்டுக்கடை முதலாளிகள் தற்போதைய சூழ்நிலையில் சோற்றின் விலையைக் குறைப்பது பற்றி சிந்தித்து ஒற்றுமையாகச் செயலில் இறங்கினுல் என்ன?

க. கனகசபாபதி
வவுனியா

o

### சம்பளம் பற்றி ஒரு விளக்கம்

யாழ்ப்பாணம் உதவித் தொழில் கமிஷனர் பின்வருமாறு எழுதுகிருர் -

'இம்மாதம் 23-ம் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் 'சம்பளம் கிடைக்கவில்லை?' என்ற தலைப்பில் வெளிவந்த செய்தி எனக்கு ஆச்சரியமளித்தது. 24-ந் திகதி பத்திரிகையில் வெளிவந்த திருத்

[6-ம் பக்கம்பார்க்க]

## நாட்டிலும் நகரிலும்

'பாலும் தேனும் வழிந்தோடும் நாடு' என்று செல்வம்கொழிக்கும்ஒரு நாட்டை நாம் வர்ணிக்கும்போது சும்மா வர்ணனைக்காக அப்படிச் சொல்வோமேயன்றி நிஜமாகவே அங்கு பாலும் தேனும் வீதிகளில் வழிந்தோடுவதில்லை.

ஆனல் நிஜமாகவே பால் சாக்கடைகளில் வெள்ளப் பெருக்கு எடுப்பதைக்காண வேண்டுமென்ருல் இன்றைக்கு அமெரிக்காவுக்குப் போனுல் காணலாம். உண்மையாகத்தான் சொல்லுகிறேன், அதிசயப்படாதீர்கள்!

அதுமட்டுமல்ல, அங்கே பெண்களுக்கு பாலாபிஷேகம் செய்கிருர்களாம். கார்களைபாலால் கழுவுகிருர்களாம். இன்னும் எத்தனையோதேவைகளுக்கு தண்ணீருக்குப் பதில் பசும்பாலை உபயோகிக்கிருர்களாம்.

அமெரிக்கா செல்வமுள்ள நாடு என்பதை உலகமெல்லாம் அறியும். ஆயினும்தங்கள் செல்வத்தைபட்டவர்த்தனமாகக் காட்டுவதற்காகவா அமெரிக்கர் இப்படிச் செய்கிருர்கள்?

அப்படி ஒன்றுமில்லை. பால் உற்பத்தியாக்கும் பண்ணையாளருக்கும்அதை வாங்கும் வியாபாரிகளுக்குமிடையே பால்விலை சம்பந்தமாகத் தகராறு ஏற்பட்டு விட்டது. உற்பத்தியாளர் கூடியவிலை கோரினுர்கள். வியாபாரிகள் அதற்கு சம்மதிக்கவில்லை. உடனேபண்ணைக்காரர் 'உங்களுக்கு குறைந்த விலைக்குக் கொடுப்பதைவிட பாலைசாக்கடையில் கொட்டுவோம்' என்று வெஞ்சபதம் கூறி மேலே சொல்லப்பட்ட ஆச்சரியமான நடவடிக்கைகளில் ஈடுபடுகிருர்களாம்.

உலகில் ஒரு மூலையில் மக்கள் ஒரு நேரக் கஞ்சிக்கு 'கோவிந்தா' போடுகிருர்கள். இன்னொரு மூலையில் பெண்களையும் கார்களையும் பாலில் குளிப்பாட்டுகிருர்கள். என்ன விசித்திரமான உலகம் இது!

பால் சம்பந்தமாக எழுதும்போது இலங்கையில் தான் தென் கிழக்காசியாவிலேயே மிகச்சிறந்த முதலாம் நம்பர் பசு இருக்கிறதாம். அதன் பெயர் 'கிரி தேவி'. அதுபோபபத்தலாவை அரசாங்கப் பண்ணையில் வசிக்கிறது. ஒரு நாளைக்கு ஐம்பத்தொரு போத்தல் பால் கறக்கிறதாம் இந்தக்காராம்பசு. கிரிதேவியை உணவு உற்பத்தி போர்க்களத்தில் குதித்திருக்கும் நமது பிரதமர் நேரில் சென்று பார்த்து தாடையை தடவிக் கொடுத்தாராம்.

அரசாங்கப் பண்ணைகளில் கிரிதேவிகள் இருந்தென்ன, அவைகளை பிரதம மந்திரிகள் பார்வையிடுவதில் என்ன? பொதுமக்களுக்கு இதனுல் என்ன பிரயோசனம்? அரசாங்க பண்ணைகள் எல்லாம் ஆராய்ச்சி நிலையங்கள். அவற்றில் ஐம்பத்தொரு போத்தல்கறக்கும் பசுக்களும் ஏக்கருக்கு நூற்றைம்பது புசல் விளையும் நெல் இனங்களும் இருப்பதில் ஆச்சரியமில்லை. இருக்கத்தான் வேண்டும். அப்படிச் சிறந்த இனங்களை நாடு முழுவதும் பரப்புவதில் தான் கெட்டித்தனமிருக்கிறது. அப்பொழுது தான் உணவு நெருக்கடி தீரும்.

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹனேய்க்கு அருகே கடும் விமான தாக்குதல்

## கொலைகாரப் போரில் அமெரிக்கா என டிட்டோ கண்டனம்

### அமெரிக்க துருப்புகள் 1000 பேர் கொலை

சைகோன், மார்ச் 27

**வியட்னும் போரில் இதுவரை நடைபெற்ற தாக்குதல்களில் எல்லாம் மிகப் பெரிய தாக்குதலெனக் கருதப்படும் தாக்குதலை அமெரிக்கக் குண்டுவீச்சு விமானங்கள் நேற்று வடவியட்னும் தலைநகரான ஹனேய்க்குச் சில மைல் தொலைவில் நடாத்தியது. இவ்விமானத் தாக்குதல் 30 நிமிடங்களுக்குத் தொடர்ந்து நடைபெற்றது.**

இதற்கிடையில் மூன்று அமெரிக்க விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாகவும், மார்ச் 20, 21-ம் திகதிகளில் இராணுவ சூன்யப் பிராந்தியத்துக்குத் தெற்கே அமெரிக்க இயந்திரத் துப்பாக்கிப் படையினரின் மீது வட வியட்னுமிய இயந்திரத் துப்பாக்கிப்படையினர் நடாத்திய கடும் தாக்குதலின் விளைவாக 1,000 அமெரிக்கத் துருப்புகள் வரை இறந்ததாகவும் வடவியட்னும் பத்திரிகை 'நாம்தாம்' தெரிவித்துள்ளது.

**டிட்டோ கண்டனம்**

யூகோஸ்லேவிய ஜனுதிபதி டிட்டோ' பிரென்டினு என்னுமிடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில், வடவியட்னுமில் அமெரிக்கா கொலைகாரப் போர் ஒன்றை நடாத்திவருவதாக அமெரிக்காவைக் கண்டித்தார். 'இப்போரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொலைசெய்யப்படுவதை நாம் அசிரத்தையுடன் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இப்போரில் மாள்வதில் அதிகமானேர் குடிமக்களே. ஆகவே அமெரிக்கா மனித குலத்துசகு எதிராக நடாத்தும் போர் இது என்றே கூற வேண்டும்' என்ருர் அவர்.

**லூதர் கிங்**

அமெரிக்க நீக்ரோத் தலைவர் டாக்டர் மார்டின் லூதர் கிங்கும், நேற்று அமெரிக்க வியட்னும் கொள்கையைக் கண்டித்துப் பேசினுர். இவர் நேற்றுப் போர் எதிர்ப்பு ஊர்வலமொன்றை சிக்காமகா நகரில் நடாத்தினுர். அப்போது அவர் பேசுகையிலே, வியட்னுமில் அமெரிக்காகடைப்பிடிக்கும் கொள்கை, அத்துடன் கலாச்சாரத்துக்கும், நாகரிகத்துக்கும் முற்றிலும் ஒவ்வாதது எனக் கூறினுர். அமெரிக்கா முழுவதிலும் பொதுவாகப் போர் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் குழுக்கள், வியட்னும் போர் எதிர்ப்புச் சக்திகளையும் இணைத்து ஒன்றாகச் செயலாற்ற முன்வரவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

### பாரத-சோவியத். நட்புறவு சங்கம 15 வது ஆண்டு விழா

புதுடில்லி, மார்ச் 27

புதுடில்லியில் பாரத-சோவியத் நட்புறவுச் சங்கத்தின் 15 வது ஆண்டு விழா நேற்றுக் கொண்டாடாப்பட்டது.

விழாவில்கலந்து கொண்ட மத்திய மந்திரி திரு. கரண் சிங் கடந்தவருடங்களில் பாரத-ரஷ்ய நட்புறவுச் சங்கம் உலக சமாதானத்துக்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரியவை எனக் கூறினுர்.

### பாப்பரசர் போலின் ஈஸ்டர் செய்தி

ரோம், மார்ச் 27

நேற்று ரோமில் ஈஸ்டர் திருநாள் விழாவில் கலந்து கொண்ட பல்லாயிரக்கணக்கான மக்களுக்கும், உலகில் ஏனைய பகுதிகளில் கொண்டாடிய எண்ணற்ற மக்களுக்கும் விடுத்த விசேஷ செய்தியில், நாடுகளிடையே பொருளாதாரத் தன்னிறைவு, ஒழுக்க சீலம், சர்வதேச நட்புறவு ஆகியவற்றை இனிமேலும் புறக்கணிக்க முடியாது என பாப்பரசர் போல் கூறியுள்ளார். இவற்றில் மதபீடம் அதிக அக்கறைகாட்ட வேண்டுமென அவர்கேட்டுக்கொண்டார்.

### ஆசிய மாதர் சங்க சம்மேளனம் மணிலாவில் கூடுகிறது

மணிலா, மார்ச் 27

மணிலாவில், ஆசியமாதர் சங்க சம்மேளனத்தின் 8 வது ஆண்டு விழா ஆரம்பமாகியுள்ளது. இச்சம்மேளனம் 1959-ல் ஸ்தாபிக்கப்பட்டது. சம்மேளனத்தின் ஆண்டு விழாவிற்கு 11 நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்துள்ளனர். கலாச்சாரம் கலைகள் மூலம் ஆசிய நாடுகளிடையே, குறிப்பாகப் பெண்களிடையே, பரஸ்பர நல்லெண்ணத்தை வளர்க்க உதவும் இம்மாதர் சம்மேளனம், பிலிப்பைன்சில் கூடுவது இது இரண்டாவது தடவையாகும். இதற்கு முன்னர் தாய்பெ, பாங்கொக் ஆகிய இடங்களில் கூடியுள்ளது.

### அகாலி தலைவர் குணமடைகிருர்

அமிர்தசரஸ், மார்ச் 27

அகாலித்தலைவர் சன்பத் தேசிங்கின் உடல் நிலைமை இப்போது திருப்திகரமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவர் சென்ற சனிக்கிழமையன்று இலேசான மார்பு வலிக்காளானுர். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின், அவருடைய உடல்நிலை சீரடைந்துள்ளது.

### திராட்சை

பண்டத்தரிப்பு, திங்.

இப்போகத்துக்கான திராட்சை அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வியாபாரிகள் வெளியூர்க்கடைகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.

# தரைதட்டிய கப்பல் இரண்டாக பிளந்தது

### இங்கிலாந்துக்கு ஒரு பெரிய இழப்பு.

லண்டன், மார்ச் 27

இங்கிலாந்தின் ஒரு பெரிய எணணெய்க்கப்பலான 'டொரிகன்யொன்' என்ற கப்பல், நேற்று இங்கிலாந்தின் தென்மேற்குக் கோடியில்தரைதட்டிஇரண்டாகப் பிளந்தது. 60,000 தொன் நிறையுள்ள இக்கப்பலிலிருந்து, எண்ணெய் ஆயிரம் தொன் கணக்கில் வெளியே பாய்ந்து, அருகேயுள்ளகடற்கரைகளுக்குச் சென்று கொண்டிருந்தது. பாறைகளிலிருந்து கப்பலை மீட்கும் வேலையில் ஒரு டச்சுக்கப்பலும், உள்ளூர்க் கிராம வாசிகளும் இவர்களுக்குத் துணையாக 2,000 இராணுவத்தினரும் ஈடுபட்டிருக்கிருர்கள். ஆனுலும், கப்பல் முழுவதும் மூழ்குவதைத் தவிர்ப்பது இயலாத காரியமெனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பல் 60 லட்சம் ரூபாய்க்கு இன்சூர் செய்யப்பட்டதாகும். இக்கப்பல் மூழ்குவதால், இங்கிலாந்தின் கப்பல் போக்குவரத்து இன்சூரன்ஸ் சரித்திரத்திலேயே இதுபெரிய இழப்பாகுமெனக் கருதப்படுகிறது.

கப்பலைமீட்கும்அவசர நடவடிக்கைகளைப் பிரதமர் திரு. வில்சனும், அவரது மந்திரிகள் சிலரும் மேற்பார்வை செய்து கொண்டிருந்தனர்.

# சியராலியோனில்இராணுவம் எல்லா அதிகாரமும் ஏற்றது

### அரசியல் கட்சிகளுக்கு தடை

பிரீடவுன், மார்ச் 27

சியராலியோனில் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள புதிய இராணுவக்குழு, நிர்வாக சட்ட அதிகாரங்களை வைத்துக் கொண்டுள்ளதாகப் பிரகடனம் செய்துள்ளது. மக்கள் பிரதிநிதிகள் சபை கலைக்கப்பட்டுள்ளது. பிரகடனத்துக்கு மாருன அரசியற் சாசன ஷரத்துகள் தடைசெய்யப்பட்டுள்ளன. அரசியல் கட்சிகளும்தடைசெய்யப்படும்.

இராணுவக்குழுவினர் நியமித்துள்ள 8 பேரடங்கிய சீர்திருத்தக் கமிட்டிக்குச் சமூக விரோதிகளைத்தடைக்காவலில் வைக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய அரசியற் சாசனத்தை சியராலியோனின் பிரதம நீதியரசர் உட்படப் பதினெரு நீதிபதிகள் ஏற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

பிரதமர் பதவிக்குப் போட்டியிட்ட திரு. ஸ்டீவென்சும், சேர் அல்பேர்ட் மாகாய் ஆகிய இருவரும் முதலில் இராணுவக் குறுக்கீட்டை நடாத்திய பிரிகேடியர் டேவிட் லான்சனுவும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக அதிகாரம் கைப்பற்றியுள்ள இராணுவ உத்தியோகத்தர்கள் தமதுதலைவராக, நியூயோர்க்கில் ஐ.நா.வில் சியராலியோனின் இரண்டாவது காரியதரிசியாகக் கடமையாற்றும் கேணல் கெண்டாவைத் தெரிவுசெய்துள்ளனர்.

தலைநகரான பிரீடவுனிலும், பூரண அமைதி நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

# கேரள முதன் மந்திரி புதுடில்லிக்கு விஜயம்

### ராஜ்யத்தில்உணவுநெருக்கடி

திருவனந்தபுரம், மார்ச்27

கேரள முதன் மந்திரி திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் இன்று காலை புதுடில்லிக்குப் பயணமானுர். தமது ராஜ்யத்தில் நிலவும் உணவு நிலைமையைப் பற்றி மத்திய அரசாங்கத்துக்கு விளக்கிக் கூறும்வகையிலேயேஅவர் இவ்விஜயத்தை மேற்கொண்டுள்ளார். ராஜ்யத்திலுள்ளநெருக்கடியான உணவு நிலைமையைச் சீர்ப்படுத்த நடவடிக்கைகள் எடுப்பது பற்றி அவர் மத்திய அரசாங்கத்துடன் பரிசீலனை செய்வார்.

தமது ராஜ்யத்தில் உணவு நிலைமை மிக நெருக்கடியானநிலையிலுள்ளதாலேயே தாம் அடுத்த மாத முற்பகுதியில் புதுடில்லியில் நடைபெறவிருக்கும் ராஜ்ய முதல் மந்திரிகள் கூட்டம் வரை காத்திராமல், உடனடியாகப் புதுடில்லிக்குச் செல்வதாக திரு. நம்பூதிரிபாத், விமான நிலயத்தில் வைத்துப் பத்திரிகையாளரிடம் தாம் புறப்படுவதற்குமுன் கூறினுர்.

கேரளத்துக்குத் தமிழ்நாடு உறுதியளித்த 18,000 தொன் அரிசி வந்துசேருவதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த முதல் மந்திரி, ஒற்றை ராஜ்ய மண்டலங்கள் ராஜ்யங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறிவிட்டதாகக் கூறினுர். தென் இந்திய ராஜ்யங்களான கேரளம், தமிழ்நாடு, மைசூர், ஆந்திரா ஆகியன இணைந்த தென்னிந்திய மண்டலம் ஒன்று அமைவதுபிரச்னைகளைத் தீர்க்க உதவுமெனத் தாம் நம்புவதாகவும் அவர் மேலும் கருத்துத் தெரிவித்தார்.

ஆனல், திரு. நம்பூதிரிபாத்தின் கருத்தை ஆந்திர முதல் மந்திரி மறுத்துப் பேசும் வகையில் ஆந்திராவில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் கருத்து வெளியிட்டுள்ளார். ஒற்றை ராஜ்ய மண்டலங்களே சிறந்தது என்றும், தென் இந்தியாவிலுள்ள ராஜ்யங்களின் இணைப்பு மண்டலம் கேரள முதல் மந்திரியின் யோசனை மட்டுமேயாகும் என்று அவர் கூறியுள்ளார்.

# புதுச்சேரியில் மீண்டும் காங்கிரஸ் மந்திரிசபை

### சென்னையில் முடிவு

புதுச்சேரி, மார்ச் 27

புதுச்சேரியில் புதியமந்திரி சபையை அமைப்பதென புதுச்சேரி சட்டசபைக் காங்கிரஸ் அங்கத்தவர்கள் சென்னையில் முடிவு செய்துள்ளனர்.

புதுச்சேரி காங்கிரஸ் அங்கத்தவர்கள் 17 பேரும் காங்கிரஸ் அக்கிராசனர் திரு. காமராஜரின் ஆலோசனையைப் பெற நேற்று சென்னைக்கு வந்திருந்தனர்.

சென்னையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின் இறுதியில் பழையதொழில் மந்திரி திரு. ஆர். வெங்கட்ராமன் பேசுகையில் காங்கிரஸுக்குப் புதுச்சேரியில் இப்போது 17 ஸ்தானங்கள் கிடைத்துள்ளதாகவும் ஆகவே தான் அங்கு காங்கிரஸ் மந்திரி சபை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினுர். இக்கூட்டத்தில் புதுச்சேரி காங்கிரஸ் அங்கத்தவர் 17 பேரும் கலந்து கொண்டனர்.

புதுச்சேரியில் முதலில் இருந்த காங்கிரஸ் மந்திரி சபை இருகாங்கிரஸ் அங்கத்தவர்களின் ராஜினுமாவால் முறிவடைந்தது. முதல் மந்திரி திரு. வெங்கடசுப்பா ரெட்டி தமது மந்திரி சபையின் ராஜினுமாவை லெப்டினென்ட் ஜெனரல் கவர்னரிடம்சமர்ப்பித்தார். மொத்தம் 30 அங்கத்தவரைக் கொண்ட சட்டசபையில் காங்கிரஸ் பலம் 14 ஆகக்குறைக்கப்பட்டது.

ஆனல் இதன் பின்னர் ஒரு அபேட்சகர் காங்கிரஸில் சேர்ந்ததால் காங்கிரஸ் பலம் 15 ஆகக் கூடியது. அத்துடன் ராஜினுமாச் செய்த இரு அங்கத்தவர்களான திரு. பி. நாகமுத்துப்பிள்ளையும், திரு. பி. எம். ஸி, வரதாப்பிள்ளையும் மீண்டும் காங்கிரசில் சேர்ந்துள்ளனர். இதன் பயனுக இப்போதுகாங்கிரசின் பலம் 17 ஆகியிருக்கிறது.

புதுச்சேரியில் காங்கிரஸ் மந்திரிசபை அமைக்க அனுமதி தருமாறு புதுச்சேரி கவர்னரிடம் கேட்கப்பட்டுள்ளது.

### ஈஸ்டர் திருநாள்

பண்டத்தரிப்பு, திங்கள்

ஈஸ்டர் திருநாளையொட்டி இங்குபல கோவில்களிலும் நற்கருணை ஆராதனை, திருச்சிலுவை ஆராதனை, புது நெருப்பு மந்திரித்தல், பாஸ்காதிரி மந்திரித்தல் பாஸ்சா விழிப்புப்பூசை நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விறுவிறுப்பான உதைபந்தாட்டமோதல்

# யாழ்ப்பாண கோஷ்டியிடம் முப்படை தோற்றது

## தேவராசா அருமையாகவிளையாடினர்

யாழ்ப்பாணம், செவ். யாழ். விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் இலங்கை முப்படைக் கோஷ்டிக்கும் யாழ்ப்பாணக் கோஷ்டிக்குமிடையே நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற உதைபந்தாட்ட மோதலில் ஆரம்பத்திலிருந்து முடிவுவரையும் நன்ருக ஆடிய யாழ்ப்பாணக்கோஷ்டி வெற்றியீட்டியது. யாழ். வீரர்கள் எதிர்கோஷ்டியின் பக்கம் பந்தைக் கடத்திக் கொண்டேயிருந்தனர். முதலாவது கோலையும் மரியநாயகம் விளாசினர். இதையடுத்து யாழ். கோஷ்டிக்குக்கிடைத்த 'பனல்டி'யை பயன்படுத்திய தேவராசா ஒரு அதிர்அடி போட்டார். அருமையானஅடி! பந்துமின்னல்வேகத்தில் கோலுக்குள் பாய்ந்தது. எனினும் முப்படைக் கோஷ்டியும் இரு கோல்கள் போட்டன. இதில் முன்னணி வீரர் எம். அசீஸின் கோல் கவர்ச்சிகரமானது. இடைவேளையின்போது, இரு கோஷ்டியும் தலா இரு கோல்கள் பெற்றிருந்தன.

இடைவேளையின் பின்னர் யாழ். கோஷ்டியின் பந்து கடத்தல் அருமையாக இருந்தது. முப்படைகளும் பந்தைத் தம்வசம் கைப்பற்ற பெரும் மோதலில் குதித்தனர், வீரர் சந்தியாக்கோ மின்னல்வேகத்தில் இரு கோல்களை அற்புதமாக அடுத்தடுத்து விளாசினர். முப்படையின் முன்னணி வீரர் அதிக தூரத்தில் இருந்து அடித்த ஒரு பந்து கோல்க்கம்பங்களை ஊடுருவிச்சென்று மேலும் ஒரு கோலானது. இலங்கை முப்படைக் கோஷ்டிக்கும் யாழ்ப்பாணக் கோஷ்டிக்கும் நடைபெற்ற இந்த அருமையான உதைபந்தாட்டப்போட்டி முடிவில் யாழ்ப்பாணக்கோஷ்டி 4—3 கோல்களால்முப்படையைத் தோற்கடித்தது. யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. வி. சண்முகராசா மத்தியஸ்தம்வகித்தார்.

## வெற்றிதோல்வி இல்லை

நாரந்தனை, திங்கள்

நாவற்குழி விளையாட்டுக் கழகத்திற்கும் அரியாலை சிற்றம்பலம் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நாவற்குழி விளையாட்டு மைதானத்தில் நடந்த கிரிக்கெட் ஆட்டம் நேரமின்மையால் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்து ஆடிய நாவற்குழி விளையாட்டுக்கழகம் சகல விக்கட்டுகளையும் இழந்து 88 ஓட்டங்களையும், அரியாலைக் கோஷ்டியினர் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 56 ஓட்டங்களையும் பெற்றனர். நாவற்குழி வீரர் திருஞானசம்பந்தர் மின்னல்வேகத்தில் பந்துகளை வீசி 7 விக்கட்டுகளை வீழ்த்தினர். அரியாலைக் கோஷ்டியைச் சேர்ந்த மனோகரன் திறமையாகப் பந்துகளை வீசினர்.

## வீட்டு தோட்டங்களை பார்வையிட்டனர்

நாரந்தனை, திங்கள்

தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. பற்றிக் தலைமையில் கிராமசேவகர்களும் மத்தியஸ்தர்களும் அடங்கிய குழுவொன்று, புங்குடுதீவு, வேலணை ஆகிய இடங்களிலுள்ள, வீட்டுத் தோட்டப் பயிர்களைப் பார்வையிட்டது.

இதைத் தொடர்ந்து, நாரந்தனை. சரவணை, கரம்பொன், சுருவில் ஆகிய இடங்களில் வீட்டுத்தோட்டப்பயிர்களைப் பார்வையிட்டு பரிசுகள் வழங்கப்படுமென காரியாதிகாரி பற்றிக் தெரிவித்தார்.

## றெஸ்கானின் நினைவு விழா

ரோம், மார்ச் 27

இத்தாலிய இசைக்கலைஞர் றெஸ்கானின் நினைவு விழா சென்ற செவ்வாய்க்கிழமையன்று இத்தாலி முழுவதும் கொண்டாடப்பட்டது.

கோயிலில்

## பிரார்த்தித்துக் கொண்டே உயிர் நீத்தார்

சங்கானை, திங்கள்

பெரிய விளானில் உள்ள செல்லக்கதிர்மாம் என்னும் கோவிலில் நேற்று முன்தினம் கும்பிட்டுக் கொண்டிருக்கையில் ஐந்து பிள்ளைகளின் தந்தையான நா. கந்தன் [வயது 60] என்பவர் மூர்ச்சித்து விழுந்து மரணமானர், இது சம்பந்தமாக சங்கானைப் பொலிஸ் சாஜன்ட் தாமோதரம் சாட்சியங்களைப் பதிவு செய்தார். ஜே. எம். ஓ. சுப்பிரமணியம் பிரேதபரிசோதனை நடாத்தினர். மரணவிசாரணை அதிகாரி ஸ்தலத்தில் விசாரணை நடத்தியபின், இயற்கை மரண மெனத்தீர்ப்பளித்தார்.

## யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி தாதிகளும் தொலைபேசியும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் தாதிகளுக்குத் தொலைபேசிச் சேவை வழங்குவது சம்பந்தமாக விதிக்கப்பட்டிருக்கும் புதிய தடை உத்தரவு அவர்களிடையே பெரும் பிரச்னையை உருவாகியுள்ளதாம். இந்தப் புதிய உத்தரவினல் இங்கு கடமையாற்றும் தொலைபேசி இயக்குனர்கள் திண்டாட்டத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிகின்றது.

மேற்படி ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் தாதிகளுக்கு வெளியிடங்களிலிருந்து வரும் தொலைபேசிச் சேவைகளை வழங்கக்கூடாதென்றும், அதே வேளையில் அவர்கள் வெளியிலுள்ளவர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள வசதியளிக்கக் கூடாதென்றும், இதனல் அவர்களது கடமை தடைப்படுகின்றதெனவும் தொலைபேசி இயக்குனர்களுக்கு அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளதாம். இதனை ஆட்சேபித்து பல தாதிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புகார் செய்துள்ளதாகத் தெரிகின்றது.

தாதிகள் விடுதியில் அவர்களை அவர்களது பெற்றோரும் உறவினர்களும் தினமும் மாலை நான்கு மணிக்கு பின்னரே சந்திக்கலாமெனவும், அவர்கள் வார்டுகளில் கடமையாற்றிக்கொண்டிருக்கையில் அவர்களை யாரும் சந்திக்க முடியாதெனவும் ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளதாம். தாதிகள் விடுதிக்கு தொலைபேசி இணைப்பும் வழங்கப்படவில்லையாம். இப்படி

[5-ம் பக்கம் பார்க்க]


# யாழ்ப்பாண வாசிகளுக்கு 500 பிளட்டினம் பி. பி. பி. பேனைகள் இலவசம்



6 பெரிய சைஸ் அல்லது 10 ஸ்டான்டர்ட் சைஸ் போர்ஹான்ஸ் வெற்றுப் பெட்டிகளை போர்ஹான்ஸ், மே/பா. த. பெ. 1031, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பும் முதல் 500 யாழ்ப்பாண வாசிகள் ஒவ்வொருவருக்கும் விசேட போர்ஹான்ஸ் அன்பளிப்பாக ஒரு பிளட்டினம் பி.பி.பி. பேனை இலவசமாக அளிக்கப்படும்.

எப்பொழுதும் பாவியுங்கள்

# போர்ஹான்ஸ்

பற்பசை

புகழ்பெற்ற பல்வைத்தியரின் தனித் தயாரிப்பின் முறைக்கு தயாரிக்கப்பட்டது.

உங்கள் பற்கள் முளைப்பதற்குப் பல மாதங்கட்கு முன்பே பல்லிறுகள் தோன்றின. ஆரோக்கியமான ஈறுகளிலிருந்தே வலியபற்கள் தோன்றும். இவ்வலிய பற்கள் உங்கள் ஈறுகள் ஆரோக்கியமாக இருக்கும் வரை திடமானவையாக இருக்கும்.

நிச்சயமாக உங்களுக்கு உரமான வெண்ணிறப் பற்களும், உறுதியான ஆரோக்கிய முற்ற ஈறுகளும் வேண்டுமென்ருல், பற்பசையில் நுரை பொங்குதல் மட்டும் போதாது. உங்கள் பற்களை வெண்மையாகச் சுத்தஞ் செய்வதற்கும், ஈறுகளை உரம்பெறச் செய்வதற்கும் போர்ஹான்ஸ் பற்பசையின் பாதுகாப்பு உங்களுக்கு இன்றியமையாதது.

இவ் விலவச அன்பளிப்பு மார்ச் 31ஆம் திகதியோடு முடிவடைகிறது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## காரைநகர் கிராமசபை கேள்வி விளம்பரம்

1. 1967-ம் ஆண்டு சித்திரை மாதம் 10-ம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணி வரை காரைநகர் இந்துக்கல்லூரி வீதி, பாலாவோடை ஊரி ரோட் வேலைகட்கு காரைநகர் கிராமசபைத் தலைவரால் சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. இதன் பிரதி வட மேல் பகுதி உள்ளூராட்சி உதவி அதிபருக்கு அதே தேதியிலும், நேரத்திலும் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

3. உத்தியோகபூர்வமான கேள்விப்பத்திரங்கள் 7-4-67 தேதி பி. ப. 4 மணி வரை ரூபா 50/00 கட்டுக்காசும் பத்திரக்கிரயமாக ரூபா 5/00ம் கட்டிப்பெற்றுக்கொள்ளலாம்.

4. இவ்வேலை விபரங்கள் யாவும் காரைநகர் கிராமசபையிலும், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும் பார்வையிடலாம்.

கா. க. விசுவலிங்கம்,
தலைவர்.
கிராமசபை, காரைநகர்.

கிராமசபை அலுவலகம்,
காரைநகர்.
23-3-67 1703

## சங்கானைப் பட்டினசபை கேள்வி விளம்பரம்

1967-ம் ஆண்டு சித்திரை மாதம் 19-ந் திகதி முற்பகல் 10-30 மணி வரைக்கும் மேற்படி பட்டின சபைத் தலைவரால் 7-ம் வட்டாரத்திலுள்ள அரசடி சங்கடம் வீதிக்கு கல்லுப் பதித்து தார் ஊற்றுவதற்கு ஒப்பந்தக்காரரிடமிருந்து கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கேள்விப் பத்திரம் ஒவ்வொன்றிற்கும் கேள்விப் பிணைப்பணம் ரூபா 50-ம் பத்திரப் பணம் ரூபா 5/-ம் செலுத்தியதன்பேரில் 16-4-67 காலை 10-30 மணி வரை தலைவரால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரங்களில் கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

ஏனைய விபரங்கள் சங்கானைப் பட்டினசபை அலுவலகத்தில் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

சி. க. திருச்சிற்றம்பலம்
தலைவர்,
பட்டினசபை, சங்கானை.

பட்டினசபைக்
காரியாலயம்,
சங்கானை.
23-3-67 1711

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பராபவ வருடம் பங்குனி மாதம் 16-ந் திகதி [30-3-67] வியாழக்கிழமை இரவு 9-20 மணி முதல் 10-20 மணிவரை உள்ள விருச்சிக இலக்கின சுப முகூர்த்தத்தில் எமது புதல்வன் திருவளர் செல்வன் சபாநாதன் [சௌக்கியப் பரிசோதகர்] அவர்கட்கு சி. இ. செல்லத்துரை தம்பதிகளின் புதல்வி [S. R. S. ஜவுளிமாளிகை, யாழ்ப்பாணம்] திருவளர் செல்வி தேவகல்யாணியை திருமணஞ் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் இம் மணவிழா வைபவத்திற்கு தாங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் அன்புள்ள, க. நல்லதம்பி தம்பதிகள் [தலைமையாசிரியரும் உதவியாசிரியையும்.] இலகடி தமிழ்ப் பாடசாலை காரைநகர்.

''ஸ்ரீ கந்தவாசா'', மருதடி ஒழுங்கை, காரைநகர். 1707

## இன்று

சுழிபுரம், செவ்.

இன்று மாலை 6 மணிக்கு சுழிபுரம் அறுபத்து மூவர் குருபூசை மடத்தில் மதுரை திருப்புகழ் தவமணி கே. வி. தியாகராஜன் கோஷ்டியினரால் திருப்புகழ் இன்னிசை விருந்தும், ''கந்தனும் செந்தமிழும்'' என்னும் பொருள்பற்றிய கதாகாலக்ஷேபமும் நடைபெறும். இவ் வைபவத்துக்கு ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் தலைமை தாங்குவார்.

## ''முதல்'' நன்மை

நாரந்தனை, திங்கள்

நாரந்தனை ரோ. க. பாடசாலை, சரவணை ரோ. க. பாடசாலையில் பயிலும் கத்தோலிக்க மாணவர்களுக்கு ''முதல் நன்மை'' வழங்கும் வைபவம் ''ஈஸ்டர்'' ஞாயிறு அன்று நடைபெற்றது.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

முட்டைகள்:

வெள்ளை முட்டை -/18 சதம். சிகப்பு முட்டை -/20 சதம். வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன் உண்டு. அருணா ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1632

பஞ்சாங்கம்:

பிலவங்கவர்ஷ புதிய சுத்தவாக்கிய பஞ்சாங்கம் வெளிவந்துவிட்டது. இது செ. இராசதுரை ஜோதிஷரால் கணிக்கப்பெற்று வண்ணார்பண்ணை சாரதா அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பெற்றது. எங்கும் விலைக்குக்கிடைக்கும். 1663

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர் சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## தேவை

கஷியர்:

பெற்றோல் செட்டுக்கு கஷியர் ஒருவர் தேவை. ரூபா 1500/- பிணை ரொக்கமாக கட்டவேண்டும். கீழ்கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். M.T. செல்லையா அன்சன்ஸ், 46, பிறவுன் ரோட், யாழ்ப்பாணம். 1662

## சங்கானைச் சந்தை

சங்கானை, திங்கள்

சங்கானைச் சந்தையை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் விசேட சந்தையாக்குவதற்கு பட்டின சபை எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை விற்பனையாளர்களும் பாவனையாளர்களும் வந்து மற்றைய கிழமை நாட்களைப்போல பொருட்களை வாங்கிச் சென்றனர். வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் இன்னும் பலவிதமான தேவைப் பொருட்களை மக்கள் வாங்கக்கூடியவகையில் சந்தை இருக்கும்.

## ஆடவர்களுக்கு

அதிக சக்தி தேவை. வலிவிழந்து பொலிவிழந்து வாடி நிற்கும் ஆடவர்களுக்கோர் வரப்பிரசாதம்.

### விட்டாடோன் வில்லைகள்

வாலிபர்களைப் போல் வலுவூட்டி இன்பம் பெருக்கி உடன் பலன்தர உத்தரவாதமானது. பலன் ஒருபோதும் தவறுது. எல்லா கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்.

விலை ரூ. 7-50
[தபால் செலவு சதம் 50]
விநியோகஸ்தர்கள்:

**மெட்ரோ ஏஜென்ஸி,**
235 1/1, நொரிஸ் ரோட்,
கொழும்பு.

## யாழ்ப்பாணம்....

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

யான சூழ்நிலையில் தமது பெற்றோர்களோ உறவினர்களோ தமக்கு மிக அவசியமான செய்திகளைத் தெரிவிக்க தொலைபேசியை உபயோகிக்கலாம் எனவும், இந்த வேளைகளில் தமக்கு வரும் தொலைபேசிச் சேவைகளை துண்டிப்பது நீக்கப்படல்வேண்டுமெனவும்அவர்கள் தங்கள் புகாரில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகின்றது. [ந. நி]

## பிரிவுபசாரம்

கோப்பாய், திங்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் சென்ற 38 வருட காலம் ஆசிரியையாக கடமையாற்றிய திருமதி எல். ரி. வில்லியம்ஸுக்கு கல்லூரி ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் தேனீர் விருந்துபசாரம் அளிக்கப்பட்டது.

## மாதர்களே!

மாதவிடாய் சம்பந்தமான சகல கோளாறுகளுக்கும் 2 முதல் 3 மாதங்கள்வரை மாதவிடாய் தடைப்பட்டாலும்கூட நிவாரணம்பெற உடனே

### மென்சோஸ்டிரோன்

மாத்திரையை உட்கொள்ளுங்கள்


இது ஓர் அசல் இங்கிலிஷ் உற்பத்தி

எல்லா வியாபாரிகளிடமிருந்தும் கிடைக்கும்

விலை ரூ. 7-50 தபாற்செலவு ச. 50

வி. பி. பி. கவனிக்கப்படும்.

**மெட்ரோ ஏஜென்ஸி,**
235 1/1, நொரிஸ் ரோட், — கொழும்பு 11.



அதிக வனப்பும்
எழிலும்
லாவண்ணியமும்
பெற

# பொன்ட்ஸ் வனிஷிங் கிறீம்

உங்கள் சருமத்தின் எண்ணெய்ப் பிசுக்கை அகற்றி, மாசுமறுக்களையும் குளிந்த மயிர்க் கண்களையும் மறைத்து, கரும்புள்ளிகள் உண்டாகாமல் காக்க வல்லது எண்ணெய்ப் பிசுக்கற்ற இதமான பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமத்தைப் பாதுகாத்து, சோபை யூட்டி நாளுக்கு நாள் அதிக வனப்பும் எழிலும் லாவண்ணியமும் உடையோராகத் திகழவைப்பது பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமம் பட்டுப்போன்று மிருதுவாக இருக்க பொன்ட்ஸ் வனிஷிங் கிறீமைத் தனியே உபயோகியுங்கள் அல்லது உங்கள் முக ஒப்பனை மணிக்கணக்கில் மலர்ச்சியுடன் இருக்க இதனை ஓர் அஸ்திவாரப் பூச்சாக உபயோகியுங்கள்.




அழகெனும் அணிபுனைந்து சருமத்திற்குச் சோபையூட்ட

## பொன்ட்ஸ் வனிஷிங் கிறீம்

458/67

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பளம் பற்றி ஒரு விளக்கம்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தமும் திருப்தியளிப்பதாக இல்லை. சம்பளம் கொடுக்காதது, தொழில் கமிஷனர் வேண்டுமென்றே செய்ததாகத் தவறான கருத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. உண்மை இதுதான்.

வழக்கமாக ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதம் 25-ந் திகதியில் அரசாங்க ஊழியருக்குச் சம்பளம் கொடுக்கப்படும். இந்த மாதம் 'ஈஸ்டர்' விடுமுறையையொட்டி 21-ம் திகதி சம்பளம் கொடுப்பதாக இருந்தது. கொழும்பிலிருந்து தொழிற் கமிஷனரும் சம்பளப் பணத்துக்கான காசோலையைத் தபாலில் அனுப்பியிருந்தார். ஆனால் தபால் சுணக்கம் காரணமாக 23-ந் திகதிதான் அது இங்கு கிடைத்தது.'

## உருளைக்கிழங்கு ஏற்றுமதி

கோண்டாவில், திங்கள்

கடந்த ஒருவார காலமாக கோண்டாவில் கிழக்கு ப. நோ. கூ. சங்கத்தில் தேங்கியிருந்த உருளைக்கிழங்குகள் யாவும் புகையிரத மூலம் இன்று கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. இன்றைய தினம் 225 அந்தர் கிழங்கு அனுப்பப் பட்டுள்ளன. தொடர்ந்து இச் சங்கம் கொள்வனவு செய்யும் கிழங்குகள் யாவும் உடனுக்குடன் புகையிரதம் மூலம் கொழும்புக்கு அனுப்பப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.


### மெசின் மைண்டர்

அனுபவமுள்ள மெசின்மைண்டர் உடன் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும்.

"ஈழநாடு", யாழ்ப்பாணம்.



கிங்ஸ்லி 3-வது வாரம்
[கொழும்பு]
வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி மாலை 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
போயா முன்தினம், போயாதினம்,
விடுமுறை நாட்களில் காலை 10-30 மணிக்கு

வியப்பு, திகைப்பு,
விறுவிறுப்பு
அனைவரையும் மகிழ்விக்கும்
அற்புதப் படைப்பு
தாய்ப்பாசம், அன்பு
அனைத்துக்கும் ஓர்
எடுத்துக்காட்டு



எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
எம். ஆர். ராதா, நம்பியார், நாகேஷ்,
மனோரமா, கீதாஞ்சலி, பண்டரிபாய்
நடிக்கும்
அன்னை பிலிம்ஸ்

# தாயின் மடியில்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
கெப்பிட்டல் [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா [கொம்பனித்தெரு]
விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீகிருஷ்ண [திருமலை]
மற்றும் பல திரைகளில்
இருவல்லவர்கள்


## தாக்கப்பட்டவர் ஆஸ்பத்திரியில்

பலாலி திங்கள்

எல்லைத் தகராறினால் ஏற்பட்ட சண்டையில் ஒருவர் பலத்த காயத்துக்குள்ளாகி காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மயிலிட்டியைச் சேர்ந்த வீ. தியாகராசா என்றமேற்படிநபர் பொல்லால்தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதுசம்பந்தமாக காங்கேசன்துறை பொலிஸார் விசாரணைசெய்து வருகின்றனர்.

## பிரேசிலில் மண் சரிவு

### 300 பேர் மாண்டனர்

ரியோடி ஜனரோ, மார்ச் 27

பிரேஸிலில் உள்ள ஒரு கிராமத்தில் ஏற்பட்ட மண் சரிவில், 300க்கு மதிகமானோர் மண்ணுக்குள் புதைக்கப்பட்டனர். கற்பாறைகள் விழுந்து பல வீடுகள் சேதமாகின. இதுவரை 100க்கு மதிகமான சடலங்கள் மீட்கப்பட்டன. இம்மண்சரிவு, சிறிய பூமியதிர்ச்சி ஒன்றினைத் தொடர்ந்தே ஏற்பட்டது


நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-31
விஜயா—முத்துராமன்
நடித்த
பஞ்சவர்ணக் கிளி

REGAL - JAFFNA
Daily at 4-45, 7-00 9-45
Horst Buchaholz
Jose Ferrer
in
NINE HOURS TO RAMA

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில 4காட்சிகள்
ROCKET GIRL
(serial)

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45 P M.
TONY RANDALL
in
MARRAKESH
Also showing Cricket
Test Match England
vs
West Indies and
Indiana polis
Motor Racing


## அகலவத்தை தொகுதி

கொழும்பு திங்கள்

அகலவத்தைத் தொகுதியில் மார்க்ஸீயவாதிகள் அல்லாத எல்லா எதிர்க்கட்சினரும் தேர்தல் சமயத்தில் பகிஷ்கரிப்பு செய்யப்போவதாக அறியப்படுகின்றது. இத்தொகுதியில் இம்மாதம் 29ம்திகதி நியமனப்பத்திரங்கள் தாக்கலாகும். இத்தொகுதியில் சமசமாஜக்கட்சியின்சார்பில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா போட்டியிடவிருக்கிறார்.

## ஸ்ரீபாத யாத்திரிகர் நால்வர் காயமுற்றனர்

வட்டவளை, திங்கள்

ஸ்ரீபாத மலைக்கு யாத்திரை சென்றவர்களுக்கும் தோட்டத் தொழிலாளர் சிலருக்கும் வட்டவளையில் நடந்த கைகலப்பு ஒன்றில் நான்கு யாத்திரிகர்கள் காயமடைந்தனர்.

உடரட்டமெனிக்கா வில் சென்ற யாத்திரீகர் சிலர் ரயில்பாதை ஓரத்தில் வேலை செய்துகொண்டு நின்ற தோட்டத்தொழிலாளரைப் பார்த்துக் கூச்சலிட்டுக் கேலிசெய்ததுடன் வெற்றுப்போத்தல்களாலும் மற்றும் கழிவுப்பொருள்களாலும் வீசியதாகவும் இதனால் ஆத்திரமடைந்த தொழிலாளர் யாத்ரிகர் மீது கற்களால் திருப்பித் தாக்கியதாகவும் கூறப்படுகிறது. இதன்பின் வந்த இரண்டாவது ரயிலையும் தொழிலாளர் தடுத்து நிறுத்தி யாத்திரிகர்களைத் தாக்கினர். நிலைமையைச் சமாளிக்க ஆயுதப் பொலிஸார் அழைக்கப்பட்டனர், நிலைமை பின்னர் கட்டுக் கடங்கியது.

## விசாரணைச்சபை.....

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

### பதில் நியமனங்கள்

அதிபர், உபஅதிபர் பதவிகளில் ஆசிரியர்களைப் பதில் நியமனஞ் செய்யும்போது அவர்களது தராதரங்களையோ, திறமைகளையோ சம்பந்தப்பட்ட கல்வியதிகாரிகள் கருத்திற் கொள்ளுவதில்லை. பெரும்பாலான பதில் நியமனங்கள் நீண்டகாலமாகத் தொடர்ந்து இருந்து வருகின்றன. சில பதில் நியமனங்கள் எட்டு வருடங்கள் வரை கூடத் தொடர்ந்து இருந்துவருகின்றன. இந்தச் சூழ்நிலையில் தகுதியும், உயர்தராதரமும், சேவை முதிர்ச்சியும் வாய்ந்த ஆசிரியர்கள் தம்மிலும் சேவை முதிர்ச்சிகுறைந்த ஆசிரியர்களின்கீழ் கருமமாற்றநேரிடுகின்றது. ஆசிரியர் ஒருவர் அதிபராய்ப் பதில் நியமனம் பெற்றாராயின், நிரந்தர நியமனத்தின்போது சேவை முதிர்வாளரிலும்கூடியவாய்ப்பும் உரிமையும் அவருக்கே கிடைப்பனவாய் இருக்கின்றன.


### திருமண அழைப்பு

மணமகன்: செல்வன் தவராசா [நடுக்கட்டு உத்தியோகஸ்தர், யாழ். மாநகர சபை] சந்திரசேகரம் சேகரம் அவர்களின் புதல்வன்.

மணமகள்: செல்வி புவனேஸ்வரி-இராசலிங்கம் அவர்களின் புதல்வி.

சுபதினம்: பராபவ வருஷம் பங்குனி மாதம் 18-ம் திகதிசனிக்கிழமை[1-4-67].

சுபமுகூர்த்தம்: பகல் 10 மணி 53 நிமிஷ முதல் 12 மணி 31 நிமிஷ வரையிலான மிதுனலக்கினத்தில்.

இடம்: மணமகள் இல்லம், ஈஞ்சடி வயிரவர் கோவில், சுதுமலை வடக்கு, சுதுமலை.

மாலை 4 மணிக்கும் 7 மணிக்குமிடையில் மணமகன் இல்லத்தில் விருந்துபசாரம்.

உற்றார் உறவினர்களையும் நண்பர்களையும் சமுகந்தந்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கு. சந்திரசேகரமும் பாரியாரும் [மணமகனின் பெற்றோர்],46, கொட்டடி. யாழ்ப்பாணம்.

கா. இராசலிங்கமும் பாரியாரும் [மணமகளின் பெற்றோர்], சுதுமலை வடக்கு. சுதுமலை. 1709


## யாழ்.மரவட்ட....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கப்பட்டுள்ளனர். பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு இலவச விடுதியும், இலவச உணவும் வழங்கப்படுவதுடன், கைச்செலவுக்காக சிறியளவு பண உதவியும் வழங்கப்படும். பயிற்சியைத் திருப்திகரமாக முடிப்போருக்கு, அவர்கள் பயின்ற தொழில்களையே அவர்கள் தங்கள்வீடுகளிலோ அல்லது வேறு ஸ்தாபனங்களிலோ தொடர்ந்து நடாத்தவேண்டிய உபகரணங்களையும், பண உதவிகளையும், ஆலோசனைகளையும் அரசாங்கம் வழங்கும். பயிற்சிக்காலத்தில் இந்த அங்கவீனர்களின் நலமை பற்றி ஆராய்ந்து, ஆற்றல் குறைந்தோர் அங்கவீனர், கண்பார்வை குறைந்தோர், காதுகேட்காதோர் ஆகியோருக்கு வேண்டிய அவயவங்கள், உபகரணங்கள், ஒலி கேட்கும் சாதனங்கள், கண்ணாடிகள், மூன்று சில்லுச் சைக்கிள் போன்றவைகள் வழங்குவதற்கும் சிபார்சு செய்யப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ந. நி.]







# திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் பராபவ வருஷம் பங்குனி மாதம் 16-ம் நாள் [30-3-67] வியாழக்கிழமை இரவு 7-42 முதல் 9-12 வரையுள்ள துலாலக்கின சுபமுகூர்த்தத்தில்

எங்கள் புத்திரன் திருநிறை செல்வன்
[ஆ. ச. சங்கரப்பிள்ளை அன்ட் பிரதர்ஸ் பங்காளி]
இராசலிங்கம்
அவர்களுக்கும்

எங்கள் புத்திரி திருநிறைசெல்வி
சந்திரமதி
அவர்களுக்கும்

மணமகளில்லமாகிய "சூரன்வாசம்", தங்கோடை, காரைநகரில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்களும் தங்கள் சுற்றமித்திர குடும்ப சமேதராய் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

ஆ. ச. ஆறுமுகம் தம்பதிகள்
[உரிமையாளர்: ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிரதர்ஸ்,
யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, டம்புல்ல]
பாலாவோடை, காரைநகர்.

அம்பலவாணர் முருகேசம்பிள்ளை
[வவனியா கச்சேரி சிறப்பர்]
தம்பதிகள்
"சூரன்வாசம்"
தங்கோடை, காரைநகர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டுமார்ச்மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.